செ.வெ.எண்.54/செப்டம்பர் தேதி : 19.09.2016

# சாலை விபத்தில் உயிரிழந்த 5 பேர் குடும்பத்திற்கு தலா ரூ. 1 இலட்சத்திற்கான காசோலையை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கினார்.



தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்திற்குட்பட்ட பல்வேறு விபத்துகளில் இறந்த 5 பேர் குடும்பத்திற்கு தலா ரூ. 1 இலட்சத்திற்கான காசோலையையும், படுகாயம் அடைந்த 3 நபர்களுக்கு தலா ரூ. 50 ஆயிரத்திற்கான காசோலையையும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (19.09.2016) வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பல்வேறு விபத்தில் இறந்த 5 பேரின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு தலா ரூ. 1 இலட்சத்திற்கான காசோலையையும், மேலும் விபத்தில் படுகாயம் அடைந்த 3 நபர்களுக்கு தலா ரூ. 50 ஆயிரத்திற்கான காசோலையையும் மற்றும் தேசிய குழந்தை தொழிலாளர் திட்டத்தின் சார்பில் குழந்தை தொழிலாளர் முன்னாள் மாணவர் விஜய் என்பவருக்கு உயர்க்கல்வி பயில்வதற்கான உதவித்தொகை ரூ.12 ஆயிரத்திற்கான காசோலையையும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், அரூர் கோட்டாட்சியர் திருமதி. கவிதா, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு. டி.ஆர். அன்பழகன், தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு. பொன்னுவேல், தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட அலுவலர் திரு. சரவணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.